வளவனூர் பெருமாள் கோயிலில் கல்வெட்டு கண்டெடுப்பு

விழுப்புரம், ஜன.18: விழுப்புரம் மாவட்டம், வளவனூர் அருள்மிகு லட்சுமி நாராயண பெருமாள் திருக்கோயிலில் பழைமை வாய்ந்த கல்வெட்டு கண்டெடுக்கப்பட்டுள்ளது.

லட்சுமி நாராயண பெருமாள் கோயிலில் வளவனூரைச் சேர்ந்த பாவலர் தி.பழநிச்சாமி, விழுப்புரத்தைச் சேர்ந்த எழுத்தாளர் கோ. செங்குட்டுவன், செ.சித்தார்த்தன் ஆகியோர் அண்மையில் களஆய்வு மேற்கொண்டனர். அப்போது, 970 ஆண்டுகள் பழைமை வாய்ந்த கல்வெட்டு ஒன்று இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

இதுகுறித்து, கோ.செங்குட்டுவன் சனிக்கிழமை கூறியது: வளவனூர் லட்சுமி நாராயண பெருமாள் கோயிலின் கருவறை பின் பக்கச் சுவற்றில் மூன்று வரிகளில் அமைந்த துண்டு கல்வெட்டு ஒன்று தலைகீழாகப் பதிக்கப்பட்டுள்ளது.

விழுப்புரம் மாவட்டம், வளவனூர் லட்சுமி நாராயண பெருமாள் கோயிலில் ராஜாதி ராஜன் பெயரைத் தாங்கி நிற்கும் துண்டுக் கல்வெட்டு.

இதை வாசித்த மூத்த கல்வெட்டு ஆய்வாளர் எஸ்.இராஜகோபால், இதன் முதல் வரியில், புரவியொடும் பிடித்து தன்னாடை ஜெயம் கொண்டு எனும் வாசகம் இடம் பெற்றுள்ளது.

இது திங்களேர் திருதன் தொங்கல் எனத் தொடங்கும் முதலாம் ராஜாதி ராஜனின் (கி.பி.1018-1054) மெய்க்கீர்த்தியின் ஒரு பகுதியாகும்.

இரண்டாவது வரியில் பிரம்மதேசத்து திரிபுவன மஹாதேவி சதுர்வேதி மங்கலம் என்றும், மூன்றாவது வரி, ஸ்ரீ மாகேஸ்வர ரக்ஷை என்றும் முடிகிறது. இது சிவனடியார்கள் பாதுகாப்பு எனும் பொருள் தரும். இக்கல்வெட்டு சிவன் கோயிலுக்குரியதாக இருக்கலாம் என்று விளக்கமளித்துள்ளார்.

மேற்காணும் கல்வெட்டில் குறிப்பிடப்படும் ராஜாதி ராஜன், சோழ பேரரசர் ராஜராஜ சோழனின் பேரனும், ராஜேந்திர சோழனின் மகனும் ஆவார் என்பது குறிப்பிடத்தக்கது. மேலைச் சாளுக்கியருடன் நடந்த கொப்பத்துப் போரில் இந்த மன்னர் உயிர் துறந்தார்.

வளவனூரிலுள்ள ஜகந்நாத ஈசுவரர் கோயிலில் ராஜேந்திர சோழன் மற்றும் முதலாம் குலோத்துங்க சோழனின் முற்று பெறாத கல்வெட்டுகள் காணப்படுகின்றன.

தற்போது பெருமாள் கோயிலில் ராஜாதி ராஜன் கல்வெட்டு கண்டறியப்பட்டுள்ளதன் மூலம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இப்பகுதியில் பெரிய அளவில் சிவாலயம் இருந்து சிதைந்துள்ளது என்பதை அறிய முடிகிறது.

எனவே, வளவனூர் பகுதியில் முழுமையான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டால் சோழர் காலத்தடயங்கள் மேலும் கிடைக்கலாம் என்றார் செங்குட்டுவன்.

ஆட்டோவை கடத்திச் சென்ற மூவர் கைது

விழுப்புரம், ஜன.18: விழுப்புரம் மாவட்டம், திண்டிவனத்தில் ஓட்டுநரைத் தாக்கி ஆட்டோவை கடத்திச் சென்ற புகாரில் மூவர் சனிக்கிழமை கைது செய்யப்பட்டனர்.

சென்னை மடிப்பாக்கத்தைச் சேர்ந்தவர் முத்து (30). ஆட்டோ ஓட்டுநர். இவர், பொங்கல் பண்டிகைக்காக விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் அருகே விட்டிலாபுரத்திலுள்ள உறவினர் வீட்டுக்கு குடும்பத்துடன் வந்திருந்தார்.

திண்டிவனத்திலுள்ள மதுக்கடை அருகே வெள்ளிக்கிழமை இரவு ஆட்டோவுடன் அவர் நின்று கொண்டிருந்த போது, அங்கு வந்த நான்கு பேர் காவேரிப்பாக்கத்துக்கு போக வேண்டும் எனக் கூறினராம்.

தொடர்ந்து, முத்துவை நான்கு பேரும் தாக்கி, ஆட்டோவை கடத்திச் சென்றனராம். இதுகுறித்து, அவர் திண்டிவனம் காவல் நிலையத்தில் புகாரளித்தார்.

இதேபோல, திண்டிவனத்தில் திருமண மண்டபம் அருகே வெள்ளிக்கிழமை மாலை ஆட்டோவுடன் முட்டியூரைச் சேர்ந்த ஓட்டுநர் ச.சதீஷ்குமார் (25) நின்று கொண்டிருந்தார். அவரையும் தாக்கி, ரூ.1,300-ஐ மர்ம நபர்கள் பறித்துச் சென்றனராம்.

இதுகுறித்த புகாரின் பேரில், திண்டிவனம் போலீஸார் வழக்குப் பதிந்து விசாரித்தனர். விசாரணையில், இரு சம்பவங்களிலும் ஈடுபட்டது ஒரே நபர்கள் எனத் தெரிய வந்தது.

மேலும், ஆட்டோக்களை கடத்திச் சென்றது திண்டிவனத்தைச் சேர்ந்த மருதமலை (25), அஜித்குமார் (22), வெங்கடேஷ் (23) என்பது தெரியவந்தது.

போலீஸார் மூவரையும் கைது செய்து, ஆட்டோக்களை பறிமுதல் செய்தனர். இந்த வழக்கில் தொடர்புடைய ராஜேஷ் (22) மீதும் வழக்குப் பதிந்து போலீஸார் விசாரிக்கின்றனர்.

பேருந்து கண்ணாடி உடைப்பு: மூவர் மீது வழக்கு

விழுப்புரம், ஜன.18: விழுப்புரம் மாவட்டம், கண்டாச்சிபுரம் அருகே பேருந்து இயக்க நேரம் தொடர்பான பிரச்னையில், அரசுப் பேருந்தின் பக்கவாட்டுக் கண்ணாடிகளை உடைத்து சேதப்படுத்தியதாக தனியார் பேருந்து ஓட்டுநர் உள்ளிட்ட மூவர் மீது போலீஸார் வழக்குப் பதிந்துள்ளனர்.

கள்ளக்குறிச்சி மாவட்டம், திருக்கோவிலூர் பேருந்து நிலையத்திலிருந்து சென்னைக்கு சனிக்கிழமை காலை அரசுப் பேருந்து புறப்பட்டது.

பேருந்தை விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம், அணையேரியைச் சேர்ந்த பா.செல்வம் (56) ஓட்டினார்.

இந்த பேருந்து திருக்கோவிலூர்-கண்டாச்சிபுரம் சாலையில் மடவிளாகம் கால்நடை மருத்துவமனை அருகே சென்றபோது, அதே திசையில் பின்னால் வந்த தனியார் பேருந்தின் ஓட்டுநர், நடத்துநர், பரிசோதகர் ஆகிய மூவரும் அரசுப் பேருந்தை வழிமறித்து, அரசுப் பேருந்து ஓட்டுநரான செல்வத்திடம் வாக்குவாதம் செய்தனராம்.

தொடர்ந்து, அரசுப் பேருந்தின் பக்கவாட்டுக் கண்ணாடிகளை மூவரும் உடைத்தனராம்.

இதுகுறித்த புகாரின் பேரில், கண்டாச்சிபுரம் போலீஸார் வழக்குப் பதிந்து தனியார் பேருந்து ஓட்டுநர் ரஷீத் (25), நடத்துநர் சிறிதர் (24), பயணச் சீட்டுப் பரிசோதகர் தாமோதரன் ஆகிய மூவர் மீதும் வழக்குப் பதிந்துள்ளனர்.

போக்குவரத்து விதி மீறல்: 2,392 பேர் மீது வழக்கு

விழுப்புரம், ஜன.18: விழுப்புரம் மாவட்டத்தில் பொங்கல் திருநாளையொட்டி போலீஸார் நடத்திய அதிரடி சோதனையில், போக்குவரத்து விதிகளை மீறியதாக 2,392 பேர் மீது வழக்குப் பதியப்பட்டுள்ளது.

விழுப்புரம் மாவட்டத்தில் பொங்கல் திருவிழாவை அமைதியாக பொதுமக்கள் கொண்டாடும் வகையிலும், குற்றச் சம்பவங்கள் நிகழாது தடுக்கும் வகையிலும் பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்ள மாவட்ட எஸ்.பி. ப.சரவணன் உத்தரவிட்டிருந்த நிலையில், மாவட்டம் முழுவதும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

அதன்படி, ஜன.13 முதல் 16-ஆம் தேதி வரை விழுப்புரம், செஞ்சி, திண்டிவனம், கோட்டக்குப்பம், விக்கிரவாண்டி காவல் உள்கோட்டங்களுக்குள்பட்ட பகுதிகளில் டி.எஸ்.பி.க்கள் தலைமையில் தீவிர சோதனை நடத்தப்பட்டன.

குற்றம் அதிகம் நடைபெறும் இடங்களாகக் கருதப்படும் பகுதிகளில் பழைய குற்றவாளிகள், ரௌடிகளின் நடமாட்டம் குறித்தும் கண்காணித்த போலீஸார், வங்கிகள், நகைக் கடைகள் இருக்கும் பகுதிகளிலும் தீவிர கண்காணிப்பை மேற்கொண்டனர்.

போலீஸாரின் சோதனையில் குடிபோதையில் வாகனம் ஓட்டியது, தலைக்கவசம் அணியாமல் சென்றது, சீட் பெல்ட் அணியாமல் கார்களை ஓட்டிச் செல்லுதல், அதிக சுமை ஏற்றிச் செல்லுதல், அதிவேகமாக வாகனங்களை ஓட்டுதல், வாகன அனுமதிச்சீட்டு உள்ளிட்ட ஆவணங்கள் இல்லாமல் வாகனங்களை இயக்குதல் உள்ளிட்ட பல்வேறு போக்குவரத்து விதிகளை மீறியதாக 2,392 பேர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும், 250 இருசக்கர வாகனங்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

மாவட்டத்தில் சாராயம், மது பானங்கள் விற்பனை செய்தல், பணம் வைத்து சூதாடுதல், தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருள்கள், லாட்டரி விற்பனை மற்றும் மதுபோதையில் பொது இடத்தில் நின்று கொண்டு பொதுமக்களிடம் தகராறு செய்தல் போன்ற பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்டதாக 210 பேரை கைது செய்துள்ளதாக மாவட்டக் காவல் துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

பைக் மோதியதில் முதியவர் உயிரிழப்பு

விழுப்புரம், ஜன.18: விழுப்புரம் மாவட்டம், ஒலக்கூர் அருகே சாலையைக் கடக்க முயன்ற முதியவர் பைக் மோதியதில் வெள்ளிக்கிழமை உயிரிழந்தார்.

திண்டிவனம் வட்டம், பாதிரி கிராமம், ரெட்டியார் தெருவைச் சேர்ந்த கோவிந்தராஜ் மகன் குமாரசாமி (64). விவசாயி.

இவர், வெள்ளிக்கிழமை மாலை தனது நிலத்தில் விவசாய வேலைகளை முடித்துக் கொண்டு, திருச்சி- சென்னை தேசிய நெடுஞ்சாலையைக் கடக்க முயன்றார்.

அப்போது, திண்டிவனத்திலிருந்து சென்னை நோக்கி அதிவேகமாகச் சென்ற பைக், குமாரசாமி மீது மோதியது.

இதில், தூக்கி வீசப்பட்டு பலத்த காயமடைந்த அவரை அப்பகுதியிலிருந்தவர்கள் மீட்டு, திண்டிவனம் அரசு மருத்துவமனையில் அனுமதித்தனர்.

அங்கு அவரை பரிசோதித்த மருத்துவர்கள், குமாரசாமி ஏற்கெனவே உயிரிழந்துவிட்டதாக தெரிவித்தனர்.

இதுகுறித்து, ஒலக்கூர் போலீஸார் வழக்குப் பதிந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

கடலில் மூழ்கி மாணவர் மரணம்

விழுப்புரம், ஜன.18: விழுப்புரம் மாவட்டம், கோட்டக்குப்பம் அருகே கடலில் குளித்துக் கொண்டிருந்த தனியார் பல்கலைக்கழக மாணவர் நீரில் மூழ்கி வெள்ளிக்கிழமை உயிரிழந்தார்.

உத்தரப்பிரதேச மாநிலம், கான்பூர் மாவட்டம், பர்தேவன்பூர் லால் பங்களா சரசுவதி பள்ளித் தெருவைச் சேர்ந்த அத்துல்குமார் பாண்டே மகன் துரு பாண்டே (22).

வேலூரிலுள்ள தனியார் பல்கலைக்கழகத்தில் எம்.சி.ஏ. இரண்டாமாண்டு படித்து வந்த இவர், தனது நண்பர்களான பர்ஷாத், மணீஷ் ஆகியோருடன் பொங்கல் விடுமுறையைக் கொண்டாட கோட்டக்குப்பம் பகுதிக்கு வெள்ளிக்கிழமை வந்தார்.

தந்திரயான்குப்பம் கென்னடி பீச் கடற்பகுதியில் துரு பாண்டே தனது நண்பர்களுடன் குளித்துக் கொண்டிருந்தார்.

அப்போது எதிர்பாராதவிதமாக அவர் கடலில் அலையில் சிக்கிக் கொண்டார். இதில், நீரில் மூழ்கிய அவர் நிகழ்விடத்திலேயே உயிரிழந்தார்.

இதுகுறித்து, கோட்டக்குப்பம் போலீஸார் வழக்குப் பதிந்து விசாரித்து வருகின்றனர்.

விவசாயி வெட்டி கொலை: 3 பேர் கைது

செஞ்சி, ஜன.18: விழுப்புரம் மாவட்டம், செஞ்சி அருகே விவசாயியை வெட்டிக் கொலை செய்ததாக மூவரை போலீஸார் சனிக்கிழமை கைது செய்தனர்.

செஞ்சியை அடுத்த குறிஞ்சிபை வடக்குத்தாங்கல் கிராமத்தை சேர்ந்த மகாலிங்கம் மகன் சேகர் (38), விவசாயி.

இவருக்கும் அவரது உறவினர் ஏழுமலைக்கும் நீண்ட நாள்கள் முன்விரோதம் இருந்து வந்ததாகக் கூறப்படுகிறது.

வெள்ளிக்கிழமை சேகரின் நிலத்தின் வழியே ஏழுமலை டிராக்டரை ஓட்டிச் சென்றாராம். இது பற்றி சேகரின் தந்தை மகாலிங்கம் ஏழுமலையிடம் கேட்டுள்ளார்.

இதனால், சேகர் தரப்புக்கும் ஏழுமலை தரப்புக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது. ஆத்திரமடைந்த ஏழுமலை, அவரது மகன்கள் கிருஷ்ணன், அரவிந்த ஆகிய மூவரும் சேகரை வெட்டியதில் நிகழ்விடத்திலேயே உயிரிழந்தார்.

அப்போது, தடுக்க வந்த சேகரின் அண்ணன் சங்கரையும் அவர்கள் வெட்டினர். இதில், பலத்த காயமடைந்த அவர் செஞ்சி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தகவலறிந்து நிகழ்விடத்துக்கு வந்த செஞ்சி போலீஸார் சேகரின் சடலத்தை மீட்டு உடல்கூறாய்வுக்காக விழுப்புரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர்.

இதுதொடர்பாக, செஞ்சி போலீஸார் வழக்குப் பதிந்து ஏழுமலை, கிருஷ்ணன், அரவிந்த் ஆகிய மூவரையும் கைது செய்து விசாரித்து வருகின்றனர்.

முதியவர் தீக்குளித்து தற்கொலை

விழுப்புரம், ஜன.18: விழுப்புரத்தில் முதியவர் தீக்குளித்து தற்கொலை செய்து கொண்டது குறித்து போலீஸார் வழக்குப் பதிந்து விசாரித்து வருகின்றனர்.

விழுப்புரம் மேற்கு அய்யனார் குளத் தெருவைச் சேர்ந்த பட்டாபிராமன் மகன் நடராஜன் (82). இவர், கடந்த 2 ஆண்டுகளாக பக்கவாத நோய் பாதிப்புக்கு சிகிச்சை பெற்று வந்தாராம்.

இதன் காரணமாக மனஉளைச்சலில் இருந்து வந்த அவர், சனிக்கிழமை காலை வீட்டின் மாடிக்குச் சென்று மண்ணெண்ணெய் ஊற்றி தீ வைத்துக் கொண்டாராம்.

உடனே அவரது குடும்பத்தினர், நடராஜனை மீட்டு விழுப்புரம் மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதித்தனர். அங்கு, அவர் உயிரிழந்தார்.

இதுகுறித்து, விழுப்புரம் நகர போலீஸார் வழக்குப் பதிந்து விசாரித்து வருகின்றனர்.

ஆக்ஸிஸ் பேங்க் லிமிடெட்

வீகல் & சப்போர்ட் டீம், 2வது தளம், கதவு எண்.31, பழைய எண். 14, தெற்கு மாடவீதி, மயிலாப்பூர், சென்னை - 600 004.

கோரிக்கை அறிவிப்பு

2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதி சொத்துக்களைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்தின் உரிமை அமலாக்கச் சட்டம் பிரிவு 13(2)-ன் கீழ் கோரிக்கை அறிவிப்பு.

கீழே குறிப்பிட்டுள்ள கடன்தாரர்கள் மற்றும் இணை கடன்தாரர்கள் வங்கியிடமிருந்து பெறப்பட்ட கடன் வசதிகளுக்கான அசல் மற்றும் வட்டி திரும்ப செலுத்த தவறிவிட்டதால் கடன் கணக்குகள் வாராக்கடனாக வகுப்பட்டுள்ளது. 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதி சொத்துக்களைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்தின் உரிமை அமலாக்கச் சட்டம் பிரிவு 13(2)-ன் கீழ் அவர்களின் கடைசியாக தெரிந்த முகவரியில் அனுப்பப்பட்டு அந்த அறிவிப்பு பட்டுவாடா ஆகாமல் திரும்ப பெறப்பட்டுள்ளதால் இந்த பொது அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்படுகிறது என்று இந்த அறிவிப்பு வழங்கப்படுகிறது.

கடன் கணக்கு எண் மற்றும் கடன்தாரர் பெயர் மற்றும் முகவரி	அறிவிப்பு தேதி Ref No.	NPA தேதி	மொத்த நிலுவைத் தொகை (அறிவிப்பு தேதியிலிருந்து)
வ.எண்.1: கடன் கணக்கு எண்கள்.914030046692941 1. திருமதி. சவித்தா, க/பெ. திரு. சௌந்தரராஜன், எண்.63, 1வது குறுக்கு தெரு, மரியாள் நகர், ரெட்டியார்பாளையம், புதுச்சேரி - 605010. 2. திரு. தனசேகர், த/பெ. திரு. சிவராமன், எண்.24, ஜான்சி நகர், இந்திராகாந்தி நகர், ஓல்டியன்பேட்டை, பாண்டிச்சேரி - 605 001. 3. திருமதி. லலிதா, ந/பெ. திரு. சாந்தகுமார், எண்.23, செங்குந்தர் தெரு, பாண்டிச்சேரி - 605 001. மேலும் : எண்.24, ஜான்சி நகர், இந்திராகாந்தி நகர், ஓல்டியன்பேட்டை, பாண்டிச்சேரி - 605 001. 4. திரு. பிரபாகரன்.D, த/பெ திரு. தனசேகர் 5. திரு. D. யோகேஷ், த/பெ. திரு. தனசேகர் இருவரின் முகவரி : எண்.24, ஜான்சி நகர், இந்திராகாந்தி நகர், ஓல்டியன்பேட்டை, பாண்டிச்சேரி - 605 001.	13.12.2024 Ref. No. Agri/6881	30.04.2017	18.10.2024 அன்று வரை ரூ. 36,24,737/- மேலும் இத்தொகை 18.10.2024 வரை வட்டிடன்

திருமதி. சவித்தா, க/பெ. திரு. சௌந்தரராஜன் அவர்களுக்கு சொந்தமான சொத்துக்களின் விவரங்கள் : விழுப்புரம் பதிவு மாவட்டம், விக்கிரவாண்டி துணைப்பதிவு மாவட்டம், விக்கிரவாண்டி பஞ்சாயத்து யூனியன் எல்லைக்கு உட்பட்ட V.சாலை கிராமம், சர்வே எண்.135/3ன்படி 0.40.5 ஹெக்டேர் நிலம் மனைப்பிரிவுகளாக பிரிக்கப்பட்டு "ஸ்ரீ மகாலக்ஷ்மி நகர்" என்ற பெயர் கொண்ட மனைப்பிரிவில் மனை எண்.104ல் உள்ள காலி மனை. அளவுகள் : கிழக்கு மேற்காக - 24 அடி, தெற்கு வடக்காக - 50 அடி. மொத்த பரப்பளவு - 1200 சதுர அடி (அல்லது) 111.6 சதுர மீட்டர். எல்லைகள் : 20 அடி அகல சாலைக்கு தெற்கே, மனை எண்.103க்கு கிழக்கே, மனை எண்.105க்கு மேற்கே, மனை எண்.77க்கு வடக்கே. (பட்டாவின்படி சர்வே எண்.135/3Bன்படி 1 ஏர் அல்லது 1076 சதுர அடி பரிசீலிக்கப்பட வேண்டியதாக எடுத்துக் கொள்ளப்பட்டது).

திருமதி. லலிதா, க/பெ. திரு. சாந்தகுமார் அவர்களுக்கு சொந்தமான சொத்துக்களின் விவரங்கள் : விழுப்புரம் பதிவு மாவட்டம், விக்கிரவாண்டி துணைப்பதிவு மாவட்டம், விக்கிரவாண்டி பஞ்சாயத்து யூனியன் எல்லைக்கு உட்பட்ட V.சாலை கிராமம், சர்வே எண்.135/3ன்படி 0.40.5 ஹெக்டேர் நிலம் மனைப்பிரிவுகளாக பிரிக்கப்பட்டு "ஸ்ரீ மகாலக்ஷ்மி நகர்" என்ற பெயர் கொண்ட மனைப்பிரிவில் மனை எண்.56ல் உள்ள காலி மனை. அளவுகள் : கிழக்கு மேற்காக - 24 அடி, தெற்கு வடக்காக - 50 அடி. மொத்த பரப்பளவு - 1200 சதுர அடி (அல்லது) 111.6 சதுர மீட்டர். எல்லைகள் : 20 அடி அகல சாலைக்கு தெற்கே, மனை எண்.57க்கு மேற்கே, மனை எண்.55க்கு கிழக்கே, மனை எண்.38க்கு வடக்கே. (பட்டாவின்படி சர்வே எண்.135/3Cன்படி 1076 சதுர அடி பரிசீலிக்கப்பட வேண்டியதாக எடுத்துக் கொள்ளப்பட்டது).

வ.எண்.2: கடன் கணக்கு எண். PHR020900935056 & HTR020901796297 1. திரு. ஜெயராமன் சுந்தரராஜன் வெங்கடாச்சலப்பிள்ளை த/பெ. திரு. ஜெயராமன், 21வது தெரு, C/o. 99 Apo, டார்ஜீலிங், மேற்குவங்கம் - 911 421. மேலும் : எண்.32, மாரியம்மன் கோயில் தெரு, மதிகிருஷ்ணாபுரம் கிராமம், பாண்டிச்சேரி - 607402. மேலும் : ACPNK இந்தியன் ஆர்மி, 21வது தெரு, C/o. 99 Apo, டார்ஜீலிங், மேற்குவங்கம் - 911 421. மேலும் : மதிகிருஷ்ணாபுரம் கிராமம், உச்சிமேடு R.V. கிராமம், எண்.80, பஹுமிர் கொம்யூன் பஞ்சாயத்து யூனியன், பாஹுமிர் துணை பதிவு மாவட்டம் - 607 402. 2. திருமதி. சிவகாமி ஜெயராமன், க/பெ. ஜெயராமன், எண்.32, மாரியம்மன் கோயில் தெரு, மதிகிருஷ்ணாபுரம் கிராமம், பாண்டிச்சேரி - 607402. மேலும் : மதிகிருஷ்ணாபுரம் கிராமம், உச்சிமேடு R.V. கிராமம், எண்.80, பஹுமிர் கொம்யூன் பஞ்சாயத்து யூனியன், பாஹுமிர் துணை பதிவு மாவட்டம் - 607 402.	21.12.2024 Ref. No. Power Home / 6865A	04.12.2024	21.12.2024 அன்று வரை ரூ. 9,85,036/- மேலும் இத்தொகை 21.12.2024 வரை வட்டிடன்

திரு. ஜெயராமன், சுந்தரராஜான், வெங்கடச்சலம் பிள்ளை ஆகியோர்களுக்கு சொந்தமான சொத்துக்களின் விவரங்கள் : பாஹுமிர் துணைப்பதிவு மாவட்டம், பாஹுமிர் கொம்யூன் பஞ்சாயத்து எல்லைக்கு உட்பட்ட உச்சிமேடு வருவாய் கிராமம், கிராம எண்.80, மதிகிருஷ்ணாபுரம் கிராமம் என்ற முகவரியில் காணியனவீடு எண்.242 பகுதி மற்றும் மறு சர்வே எண்.76/15/Aன்படி 02 ஏர்ஸ் மற்றும் 37 சென்ட் ஏர்ஸ் அதற்கு சமமாக 2550 சதுர அடி காலி குடியிருப்பு இடம். மேலும் அதனுடன் இணைந்த அனைத்து நுண்டுகளும், பகுதிகளும். எல்லைகள் : ராமச்சந்திரன் மற்றும் பிறதரப்பினருக்கு சொந்தமான மனைக்கு கிழக்கே, கிருஷ்ணன் அவர்களுக்கு சொந்தமான மனைக்கு மேற்கு மற்றும் தெற்கே, சாலைக்கு வடக்கே மீதே குறிப்பிட்டுள்ள தீர்வு பத்திரத்தின்படி கொடுக்கப்பட்டுள்ள சொத்தின் விவரங்கள் : (இனிமேல் சொத்து என்று கருதப்படும்).

மேற்குறிப்பிட்ட கடன்தாரர்கள் மற்றும் / அல்லது அவர்களின் ஜாமீன்தாரர்கள் இந்த அறிவிப்பு வெளியான தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் நிலுவைத்தொகை செலுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். தவறும் பட்சத்தில் இந்த அறிவிப்பு தேதியிலிருந்து 60 நாட்கள் காலவதியான பிறகு 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதி சொத்துக்களைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்தின் உரிமை அமலாக்கச் சட்டம் பிரிவு 13, உபப்பிரிவு (4)-ன் கீழ் மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

கடனுக்கு ஈடாக அடமானம் வைக்கப்பட்டுள்ள சொத்தினை மீட்பதற்குரிய கால வரம்பு குறித்து சட்டப் பிரிவு 13(8) ஷரத்துக்களின் மீது கடன்தாரர்கள் /அடமானதாரர்கள்/ஜாமீன்தாரர்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது (ஈடு பெற்ற சொத்து).

இடம் : சென்னை
தேதி : 19.01.2025

அதிகாரப்பூர்வ அதிகாரி,
ஆக்ஸிஸ் பேங்க் லிமிடெட்

ப்ரித்வி அசெட் ரிகன்ஸ்ட்ரக்ஷன் அண்டு செக்யூரிடைசேஷன் கம்பெனி லிமிட்டெட்.

PARAS

பதிவு & பெறுநிறுவன அலுவலகம் : கதவு எண்: 1-55, 'ராஜா ப்ராசதம்', 4வது தளம், விங்-I, மஸ்ஜித் பண்டா சாலை, கொண்டாபூர், ஹைதராபாத்-84.CIN: U67120TG2007PLC053327 தொலைப்பேசி எண்: 040-41413333. தொலைநகல்-040-41413301, மின்னஞ்சல் : co@paras.org.in இணையம்: www..paras.org.in

அசையாச் சொத்துகள் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

அசையாச் சொத்துகள் விற்பனைக்கான மின் ஏல விற்பனை அறிவிப்பு. கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் (சர்பாசி சட்டம்) 2002 அதனுடன் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 8(6)- க்கான வரத்துகளின்கீழ்.

இந்த அறிவிப்பு மூலம் பரவலாக பொது மக்களுக்கும் குறிப்பாக கடன்தாரர்(கள்), அடமானதாரர்கள் & ஜாமீன்தாரர்/களுக்கும் தெரிவிப்பது யாதெனில், ஈடு பெற்று கடனளித்தவரிடம் அடமானம்/அடகு செய்யப்பட்டதும், , M/s. ப்ரித்வி அசெட் ரிகன்ஸ்ட்ரக்ஷன் அண்டு செக்யூரிடைசேஷன் கம்பெனி லிமிட்டெட் (பாராஸ்) - இன் அதிகாரப்பூர்வ அலுவலரால் நேரடி கவாதீனம் எடுக்கப்பட்டதுமான, இதன் கீழ்க்குறிப்பிட்ட அசையா சொத்துக்கள் ஈடு பெற்று கடனளித்த நிறுவனம் அஃதாவது M/s. ப்ரித்வி அசெட் ரிகன்ஸ்ட்ரக்ஷன் அண்டு செக்யூரிடைசேஷன் கம்பெனி லிமிட்டெட் (பாராஸ்) - க்கு M/s.சிவகுமார் என்ர்பிரைசஸ் பிரைவேட் லி..., பிரதிநிதிகளாக அதன் இயக்குநர் திரு DS.சிவகுமார் - கடன்தாரர் மற்றும் திரு. LK சங்கர், திரு.R. ஜெயகுமார் திரு.S. வைத்தியநாதன் திரு. A. பருஷோத்தமன் மற்றும் திருமதி. R. கல்தூரி- ஜாமீன்தாரர்கள்/அடமானதாரர்கள் - ஆகியோரிடமிருந்து 31.12.2023 அன்றுள்ளபடி நிலுவையாக உள்ள தொகை ரூ. 18,88,35,499/- (ரூபாய். பதினெட்டு கோடியே எண்பத்து எட்டு லட்சத்து முப்பத்து ஐந்நூறு மற்றும் நானூறு) தொண்ணூறு ஒன்பது மட்டும்) இதனுடன் மேல்வட்டி மற்றும் செலவினங்கள் சேர்த்து வருவிக்கும் பொருட்டு, "இருக்கின்ற இடத்தில்" "இருக்கின்ற நிலையில்" மற்றும் "இருக்கின்றவற்றுடன்" என்ற அடிப்படையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள நாளில் விற்பனை செய்யப்படும்.

அசையாச் சொத்து விபரம்:

குறைந்தபட்ச கேட்பு விலை : ரூ. 63,00,000/-	டீவணித்தொகை : ரூ. 6,30,000/-
குடியிருப்பு காலி நிலம் அமையப்பெற்ற நகர் சர்வே எண் 2433, வார்டு எண் 7, ப்ளாக் எண் 45, தண்டபாணி நகர், வில்லுரபாதத்தம், கடலூர் மாவட்டம், பரப்பளவு: 2155 சதுர அடி, பாத்தியதாரர்- திருமதி. R. கஸ்தூரி எல்லைகளாவன. வடக்கு- லதாவின் சொத்து தெற்கு-ராஜேஸ்வரியின் வீடு கிழக்கு: தமிழ்நாடு பொருள் வாணிப கழகத்தின் காம்பவுண்டு மற்றும் கட்டடம் மேற்கு: 24 அடி லே அவுட் சாலை	

மின் ஏல நாள்	28.02.2025
ஆய்வு நாள் மற்றும் நேரம்	20.02.2025 முற்பகல் 11.00 மணி முதல் மதியம் 02.00 மணி வரை
விலைப்புள்ளி சமர்ப்பிக்க கடைசி நாள்	27.02.2025 மாலை 5.00 மணிக்கு அல்லது அதற்கு முன்பு
மின் ஏல நேரம் *	முற்பகல் 11.00 மணி முதல் மதியம் 12.00 மணி வரை
விலைப்புள்ளி அதிகரிப்பு தொகை	ரூ. 1,00,000/-

* மின் ஏல நேரம் - ஒவ்வொரு முறையும் தன்னியல்பாக 5 நிமிடம் நேர நீட்டிக்கப்படும் அஃதாவது ஏலம் முடிவுறு நேரத்தில் விலைப்புள்ளி சமர்ப்பிக்கப்பட்டால், மின் ஏலம் முடிவுறு நேரம் தவா 5 நிமிடம் அதிகரிக்கப்படும்.

சேவை வழங்குநரின் இணையத்தளமான https://www.bankeauctions.com மூலம் "இணையவழி மின் ஏலத்தில்" பங்கேற்க பொதுமக்கள் வரவேற்கப்படுகிறார்கள். சேவை வழங்குநரின் முகவரி மற்றும் விபரங்கள்: M/s C1 இந்தியா பிரைவேட் லிட். தொடர்பு நபர் 1. திரு தரணி கிருஷ்ணா தொடர்பு எண் 99481 82222 மின்னஞ்சல் முகவரி: (1) dharani.p@c1India.com and (2) andhra@c1India.com

ஆர்வமுள்ள பங்கேற்பாளர்கள் / ஏலதாரர்கள், மின் ஏல விற்பனைக்கான விரிவான விதிகள் & நிபந்தனைகளுக்கு வலைத்தளம் https://www.bankeauctions.com மற்றும் www.paras.org.in/tenders யை பார்வையிடவும்., மேலும் இணையவழி பதிவு, பயனாளர் பெயர், கடவுச்சொல், உதவி மற்றும் செயல்முறை, மின் ஏலம் தொடர்பான இணையவழியிற்கி போன்றவற்றுக்கும், தங்களது விலைப்புள்ளி படிவங்களை சமர்ப்பிப்பதற்கும், மின் ஏல செயல்முறைகளில் பங்கேற்கவும் சேவை வழங்குநரைத் தொடர்பு கொள்ள வேண்டும்.

ஆர்வமுள்ள பங்கேற்பாளர்கள் RTGS/ NEFT/ நிதி பரிவர்த்தனை மூலம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஈடுபெற்றுக் கடனளித்தவரின் கணக்கு விபரங்களின் மின் ஏல கேசரிப்பு கணக்குக்கு டேவணித்தொகை (EMD) செலுத்த வேண்டும்

கணக்கு எண்	100631100000229
ஈடுபெற்றுக் கடன் அளித்தவர்	M/s. ப்ரித்வி அசெட். ரிகன்ஸ்ட்ரக்ஷன் அண்டு செக்யூரிடைசேஷன் கம்பெனி லிமிட்டெட்.
வங்